1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இந்த மலட்டாறு திட்டம் கடந்த 3 ஆண்டுகளாகத்தான் தீவிரமாகத் திரும்பவும் நீர்த்தேக்கத் திட்டமாக மாற்றப்பட வேண்டுமென்ற கருத்தை அரசு எடுத்து வந்திருக்கிறது. அதற்கு முன் அதை நீர்த் தேக்கத் திட்டமாக அமைக்காமல் ஒரு சிறிய அணையைக் கட்டி, மலட்டாற்றிலே கிடைக்கக்கூடிய உபரி நீரை, கமுதி நிலங்களுக்கு மட்டும் கொடுத்துவிட்டால் போதும் என்று அன்றைய சூழ்நிலையிலே தவறான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதை நிறைவேற்ற வேண்டாம் என்று அரசு அதிகாரிகளுக்கு விஷயத்தைத் தெரிவித்து, இப்பொழுது முறையாகக் காரியங்கள் நடக்கின்றன. இனிமேல் காலதாமதம் ஏற்படாது. தாமதம் தவிர்க்கப்படும். நீர்த்தேக்கத் திட்டம் நிச்சயமாக வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆறின் பெயர் மலட்டாறு என்று இருந்தாலும், நீரோட்டம் உள்ள ஆறுதான் என்று மந்திரி அவர்கள் சொல்லிவிட்டார்கள். எனவே, அப்பேர்ப்பட்ட ஆற்று நீரைக் கொண்டு, இராமநாதபுரம் முதுகுளத்தூர் தாலுகாவை மேம்படுத்த அந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டு திட்டத்தை வெகு வேகமாகச் செய்து முடிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பதில்களிலும், அரசு எவ்வளவு அக்கறையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்து இருக்கிறேன். நிச்சயமாக அரசு கால தாமதத்தைத் தவிர்த்து, விரைவாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, மலட்டாறு அணைக்கட்டு என்ற பெயர் உள்ளது. அணைக்கட்டு என்ற குழந்தை பெற மலட்டாறு என்ற பெயரை அரசு மாற்றுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பெயரிலே கோளாறு இருப்பதாகத் தெரியவில்லை. பகுதிதான் கோளாறான பகுதியாக இருக்கிறது. எனவே, அதை நல்ல சிகிச்சையின் மூலமாக மாற்ற அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

ஆர். எஸ். மங்கலம் கண்மாய் கொள்ளளவு

*வினா எண் 76. திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

[1981 ஜனவரி 28

முகவை மாவட்டம் தேவக்கோட்டை டிவிஷன் ஆர்· எஸ். மங்கலம் கண்மாயின் தண்ணீர் கொள் அளவை அதிகரிக்கவும் மடை கலுங்குகளை ரிப்பேர் செய்யவும் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : ஆர். எஸ். மங்கலம் கண்மாய் மேம்பாட்டுத் திட்டம் ரூ. 32.58 லட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு கண்மாயின் கொள்ளளவு அதிகப்படுத்தப் பட்டது. கண்மாயின் எல்லா மதகுகளும் நல்ல நிலையில் உள்ளன.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 32 இலட்சம் செலவழித்து அந்த ஆர். எஸ். மங்கலம் கண் மாய் மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வந்திருப்பதாகச் சொல் கிறார்கள். அந்தச் செலவுக்குப் பின்னாடி, 6 அடியாக இருந்த குளம் 5 அடியாக குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, மாநிலத்திலே மிகப் பெரிய கண்மாயாக, 12,142 ஏக்கர் பாசனம் செய்யக் கூடிய மிகப் பெரிய கண்மாயாக உள்ளது. அந்தக் கண்மாயினுடைய கொள்ளளவு 6 அடியிலி ருந்து 5 அடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதை மேலும் 6 அடியாக உயர்த்திக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, 6 அடியை 5 அடியாகக் குறைப்பதற்காக அடிப்படைக் காரணங் கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். 1961 ஆம் ஆண்டின் நீதிமன்றத் தீர்ப்புப்படி இந்தக் கண்மாயினுடைய முழு நீர் மட்டம் அந்த அளவுக்கு மேல் போகக் கூடாது என்று தீர்ப்பு இருக்கிறது. அதனால் நீர்மட்டத்தின் அளவை உயரத் தினுடைய அளவை நாம் அதிகப்படுத்தாமல் கொள்ளளவை அதிகப்படுத்துவதற்கு இந்தப் பணத்தை செலவழித்திருக்கிறோம். ஒட்டு மொத்தமாக எந்த அளவுக்கு அங்கே நீரைத் தேக்கி வைக்கப்படவேண்டுமோ அந்த அளவுக்கு தேக்கி வைப்பதற் கான நடவடிக்கைகளில் நாங்கள் வெற்றி பெற்றிருக் கிறோம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நீண்ட காலமாக பரம்பரை பரம்பரையாக அந்தக் கண்மாய் உற்பத்தியான காலத்திலே இருந்து 6 அடியாக இருந்தது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் அது 5 அடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான காரணத்தை மீண்டும் பரிசீலனை செய்து அதை 6 அடியாக உயர்த்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

1981 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் ! ஒரே கேள்வியை இரண்டு முறை கேட்பதில் இருந்து அதனுடைய முக்கியத்துவம் தெரிகின்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இது நீதி மன்றத் தீர்ப்பின்படி அந்த உயரம் குறைக்கப்பட்டிருப்பதாக நமக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அதை கவனத்திலே கொண்டு இது நீதி மன்றத் தீர்ப்பாக இருக்கிற காரணத்தினாலே வேறு எந்த வகையில் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை நிச்சயமாக ஆலோசனை செய்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விளாத்திக்குளத்தில் அக்ரோ சர்வீஸ் சென்டர் நிறுவும் திட்டம்

* வினா எண். 77—திரு. ரா. கு. பெருமாள் ; மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திக்குளத்தில் அக்ரோ சர்வீஸ் சென்டர் அமைக்க அரசு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) தற்போது இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் 300-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சிறு விவசாயிகள் வாழ்கின்றார்கள். எனவே அங்கே ஒரு சர்வீஸ் சென்டர் ஆரம்பித்தால்தான் அங்கே உள்ள விவசாயிகள் டீசல் பெறுவதற்கும் உழுவதற்குக் கலப்பைகள் பெறுவதற்கும் இலகுவாக இருக்கிற காரணத்தால் மீண்டும் அரசு பரிசீலனை செய்து சர்வீஸ் சென்டர் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கனவே இயங்கி வருகின்ற இந்த வேளாண் பொறியியல் கூட்டுறவு பணி மையங்களிலே சில நட்டத்திலே நடந்து வருகின்றன. எனவே அவைகளை எல்லாம் லாபத்திலே நடப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தீவிரமாக எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி விளாத்திகுளத்திலே நிறைய கிராமங்கள் இருக்கலாம். 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புதூர் வேளாண் பொறியியல் மையத்திலே எல்லா வசதிகளும் இருக்கின்றன. அதை அவர்கள் பயன்படுத்துவார்களானால் தற்காலிகமாக அங்கே விவசாயிகளுக்கு ஏதாவது சேவை செய்ய முடியும் என்கின்ற பிரச்சினை எனக்கு எழுந்திருக்கிறது. அதையும் மீறி தேவைகள் அதிகமாக இருக்குமானால் நட்டத்திலே இயங்கிக் கொண்டு இருக்கின்ற அந்த